**செ.வெ.எண்: 18** **நாள்: 07.02.2026**

**திருப்பூர் மாவட்ட இயக்க மேலாண்மை அலகிற்குட்பட்ட வட்டார இயக்க மேலாண்மை அலகில் கிராமபுற பகுதிகளில் காலியாகவுள்ள கீழ்காணும் வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடத்திற்கு தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் நிரப்பிட தகுதியான நபர்களிடமிருந்து 06.02.2026 முதல் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே இ.ஆ.ப. அவர்கள் தகவல்!!!**

---

தமிழ்நாடு மளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், திருப்பூர் மாவட்ட இயக்க மேலாண்மை அலகிற்குட்பட்ட கீழ்காணும் வட்டார இயக்க மேலாண்மை அலகில் கிராமபுற பகுதிகளில் காலியாகவுள்ள கீழ்காணும் வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடத்திற்கு தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் நிரப்பிட தகுதியான நபர்களிடமிருந்து 06.02.2026 முதல் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள்: 16.02.2026.

## காலிப்பணியிட விபரம்

| வ.எண் | வட்டாரம் | வட்டார ஒருங்கிணைப்பாளர் காலிப்பணியிட விபரம் | | |
|---|---|---|---|---|
| | | ஒப்பளிக்கப்பட்ட பணியிடம் | பணியில் உள்ளவர்கள் | காலிப்பணியிடம் |
| 1 | அவிநாசி | 6 | 5 | 1 |
| 2 | தாராபுரம் | 5 | 4 | 1 |
| 3 | குண்டடம் | 5 | 3 | 2 |
| 4 | பல்லடம் | 5 | 2 | 3 |
| 5 | பொங்கலூர் | 5 | 4 | 1 |
| 6 | திருப்பூர் | 4 | 3 | 1 |
| 7 | உடுமலைப்பேட்டை | 6 | 5 | 1 |
| 8 | வெள்ளக்கோவில் | 4 | 3 | 1 |
| மொத்தம் | | 40 | 29 | 11 |

ஏதேனும் ஒரு பட்டப்படிப்பில் தேர்ச்சி மற்றும் MS-Office முடித்துள்ளமைக்கான சான்று (குறைந்தபட்சம் 3 மாதம்) அல்லது கணினி அறிவியல் அல்லது கணிணி பயன்பாட்டியலில் இளைஞர் பட்டம் முடித்திருக்க வேண்டும். 30 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும். குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் மகளிர் சுய உதவிக்குழுக்கள் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் பணியாற்றிய அனுபவம் இருக்க வேண்டும். விண்ணப்பிக்கும் வட்டாரத்திலேயே குடியிருப்பவராக இருத்தல் வேண்டும். இரு சக்கர வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும். பணியில் நல்ல நற்சான்று பெற்றவராக இருக்க வேண்டும். TNSRLM, Pudhuvaazhvu Project, IFAD Project மற்றும் இதர அரசு திட்டங்களில் ஏற்கெனவே பணியாற்றி நிர்வாக மற்றும் நிதிமுறைகேடு காரணமாக பணிநீக்கம் செய்யப்பட்டவராக இருக்க கூடாது.

விண்ணப்பதாரரின் பெயர், பிறந்ததேதி, வயது, பாலினம், கல்வித்தகுதி, வசிப்பிட முகவரி, கைபேசி எண் ஆகிய விபரங்களை விண்ணப்ப கடிதத்தில் தெளிவாக பிழைகள் ஏதுமின்றி குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். கல்வி தகுதிக்கான சான்று. வயது சான்று, பணி அனுபவச்சான்று, முகவரிக்கான சான்று, இரண்டு சக்கர வாகன ஓட்டுநர் உரிமம் இணைக்கப்பட வேண்டும். தகுதியுள்ள விண்ணப்பாதரர்களுக்கு மாவட்ட தேர்வுகுழு மூலமாக நேர்முக தேர்வு நடத்தப்பட்டு பெறப்படும் Weightage மதிப்பெண்களின் அடிப்படையில் தகுதியான நபர்கள் தேர்வு செய்யப்படுவர். விண்ணப்பங்களை அரசு வேலை நாட்களில் காலை 10:00 முதல் மாலை 5:45 வரை கீழ்காணும் முகவரியில் வைக்கப்பட்டுள்ள மூடி முத்திரையிடப்பட்ட பெட்டியில் நேரிலும் அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலும், விவரங்களுக்கு இணை இயக்குநர்/ திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, அறை எண்: 305, 3வது தளம், மாவட்ட ஆட்சியரகம், திருப்பூர் மாவட்டம்.

---

**வெளியீடு. செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**

PRO TIRUPPUR @PRO_Tiruppur @Protiruppur tiruppur.nic.in Tiruppur District Administration